கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் ஜூலை மாதம் 22ம் தேதி செவ்வாய்க்கிழமை
இடைநிலை மனு எண்.102/2023
இன்
அசல் வழக்கு எண்.494/2008
-----

1. அருள்மிகு அய்யனார் கோவில்,
   செங்குளம் கிராமம்.
2. அருள்மிகு தாழை கருப்பசாமி கோவில்,
   செங்குளம் கிராமம்.
3. ராசு தேவர் (இறப்பு)
4. முருகன்
5. பொன்னாங்கன்
6. ராமகிருஷ்ணன்(இறப்பு)
7. அழகர்
8. செல்வராஜ் என்ற மாரிச்சாமி
9. போஸ்
10. மூக்கன் (இறப்பு)
11. கண்ணன்
12. முருகாண்டி
13. உயர்திரு.நிர்வாக அதிகாரி,
    அருள்மிகு அய்யனார் கோவில் மற்றும்
    அருள்மிகு தாழ கருப்பசாமி கோவில், செங்குளம்.
14. தெய்வம்

... மனுதாரர்கள்/ வாதிகள்

/ எதிர்/

1. தவமணி
2. பாலு
3. முத்துராமலிங்கம்
4. செல்லம்மாள்
5. லட்சுமி
6. ஜெயராமன் (இறப்பு)
7. முத்துராமன்
8. வேலுச்சாமி
9. கண்ணையா
10. பாண்டி
11. கயல்விழி
12. ராணி
13. ஸ்ரீதேவி
14. பெருமாள்தேவர்
15. ஆதம்மாள்
16. செல்வி
17. கருப்பசாமி
18. மனோரஞ்சிதம்
19. பரமேஷ்வரி
20. செல்வி
21. சிங்கம்
22. பால்ராஜ்
23. சீனிபெருமாள்
24. வலையபத்தி
25. சங்கரேஸ்வரி
26. பாண்டியம்மாள்
27. உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள், மதுரை

28. உயர்திரு தமிழ்நாடு சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள்,
தேசிய நெடுஞ்சாலை நில கையகப்படுத்துதல் பிரிவு,
விருதுநகர்.
29. உயர்திரு தமிழ்நாடு சிறப்பு வட்டாட்சியர் அலுவலர் அவர்கள்,
தேசிய நெடுஞ்சாலை நில கையகப்படுத்துதல் பிரிவு,
திருமங்கலம்.

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 8, 9, 10, 12, 14, 17, 18, 20, 23, 24, 25,26 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 11, 13, 15, 16, 19, 22 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.முத்துசாமி அவர்கள் ஆஜராகியும், 21வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.தமிழ்செல்வம் அவர்கள் ஆஜராகியும், 27 முதல் 29 பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 151—ன் கீழ் மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை** :—

இந்த மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

மனுதாரர்கள் அவர்களது மனுவில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் (வாதி தரப்பு PW1) பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்ட வாக்குமூலத்தினை நீக்கரவு செய்துவிட்டு மீண்டும் வாதி தரப்பில் தாவா கோவிலின் புதிய செயல் அலுவலரை விசாரிக்க அனுமதிக்க உத்தரவிடவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>3) தீர்வு:–</u>**

3.1) இருதரப்பும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2) அசல் வழக்கில் கடந்த 06.03.2018ம் தேதி வா.சா.1 சர்க்கரையம்மாள் முதல் விசாரணை செய்யப்பட்டு, 13.03.2019ம் தேதி வா.சா.1ஐ பிரதிவாதிகள் தரப்பில் பகுதியாக குறுக்குவிசாரணை செய்துள்ளார்கள். பின்னிட்டு வா.சா.1 பணி மாறுதலாகி சென்றுவிட்டதால், அவரது சாட்சியத்தை நீக்கரவு செய்துவிட்டு, தற்போது பணியில் இருக்கும் அலுவலரை விசாரிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.3) மேற்படி வா.சா.1 ஆனவர் முதல் விசாரணை செய்யப்பட்டு, குறுக்குவிசாரணை செய்யப்பட்ட நிலையில், அவரது சாட்சியத்தை பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய நிலையில், பணி மாறுதலை ஒரு காரணமாக கொண்டு

சாட்சி விசாரணையை நீக்கரவு செய்ய வேண்டும் என்பது சட்டப்படியும், நியாயப்படியும் சரியானது இல்லை.

3.4) மேலும், மேற்படி சாட்சி விசாரணையை நீக்கரவு செய்தால், வழக்கு விசாரணையில் பாதிப்பு ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டும், வா.சா.1 திருச்செந்தூரில் பணி புரிந்து வருவதால் அவரது சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்ய இயலாது என்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்பதை கருத்தில் கொண்டும், மனுதாரர்கள்/வாதிகளின் மனுவை அனுமதிக்க முடியாது என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனுவானது நீக்கரவு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 22.07.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.07.22 18:06:23 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**இணைப்பு:-**

1. **மனுதாரர்கள் தரப்பு சாட்சி** : இல்லை
2. **மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை
3. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** : இல்லை
4. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.07.22 18:06:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.102/2023
அசல் வழக்கு எண்.494/2008
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 22.07.2025